# வேதாகமம் தேவனுடைய வசனம்

*வேதாகமம் தேவனுடைய வார்த்தையென்று உரிமைகோருகின்றது. அதன் பக்கங்களில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட முறைகள் "கர்த்தர் கூறுகின்றார்'' என்ற விளக்கக் கூற்றின் மாறுபட்ட நிலைகளை நாம் காண்கின்றோம். எபிரெயர் 1:1, 2ல் "தேவன் ... திருவுளம் பற்றினார்" என்று நமக்குக் கூறப்படுகின்றது. 2 பேதுரு 1:21ஆ "தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்'' என்று கூறுகின்றது. வேதவசனங்கள் ஏவப்பட்டவைகள் ஆகும்: "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்துதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோ. 3:16, 17).*

*சிலர், வேதாகமம் ஒரு நல்ல புத்தகம்தான், ஆனால் அது தேவனால் ஏவப்பட்டதல்ல என்கின்றார்கள். இப்படியிருக்க முடியாது: அது தேவனுடைய வார்த்தையல்லவென்றால், அது ஒரு வஞ்சனையானதாகவே இருக்க வேண்டும்.*

*வேதாகமமானது தேவனால் ஏவப்பட்ட வசனமே என்பதை நம்புவதற்கு நல்ல காரணங்கள் ஏதேனும் உண்டா? உண்டென்று நாம் நம்புகின்றோம்! இப்பாடமானது அவைகளில் சிலவற்றை விளக்கப்படுத்தும்.*

*முதலாவது நாம், "உள்ளான ஆதாரங்கள்" என்று குறிப்பிடுபவற்றைக் கவனிப்போம். வேதாகமம் ஏவப்பட்டதென்பதற்கான சாட்சியங்கள் அப்புத்தகத்தின் பக்கங்களிலேயே இருக்கின்றன. வேதாகமத்தின் மீதுள்ள உங்கள் விசுவாசத்தை வளர்த்துக் கொள்ளும் வழிகளில் ஒன்று அதைப் படிப்பதாகும்.*

# வேதாகமத்தின் ஒருமைப்பாடும், ஒத்திசைவும்

*வேதாகமம் என்று அழைக்கப்படும் இத்தொகுப்பானது அறுபத்தாறு புத்தகங்களால் ஆனதாகும். இப்புத்தகங்கள் எல்லாம் ஒரே நேரத்தில் எழுதப்பட்டவையல்ல. இவைகள் நாற்பதுக்கு மேற்பட்ட மனிதர்களால், ஏறக்குறைய ஆயிரத்து அறுநூறு வருட கால இடைவெளியில் எழுதப்பட்டவையாகும். இம்மனிதர்கள் அநேக கருத்துக்களை, பல்வகையான கோணங்களில் அணுகி எழுதியிருக்கின்றார்கள். நிறைவாக, இந்தப் புத்தகங்கள் ஒன்று கூட்டப்பட்டு ஒரே தொகுதியாக்கப்பட்டன. ஒருவர் இதைப் படிக்கையில், வேதாகமம் ஒரே புத்தகமாயிருக்கிறது என்ற உண்மையினால் வசீகரிக்கப் படுகின்றார்! புத்தகம் முழுவதிலும் ஒத்திசைவு, ஒருமைப்பாடு மற்றும் முரண்பாடில்லாமை ஆகியவை காணப்படுகின்றன. இதன் பதிவுகள் ஒன்றுக்கொன்று இணைத்தகவல் தருபவையாகவும், துணை நிற்பவையாகவும் இருக்கின்றனவே தவிர, முரண்பாடுள்ளவை களாக இருப்பதில்லை.*

*ஒருவேளை, விஞ்ஞானிகளின் குழு ஒன்று இதே போன்ற வழியில் ஒரு புத்தகத்தைத் தொகுக்க முயற்சி செய்கின்றார்கள் என்று வைத்துக் கொள்வோம். அதன் விளைவு என்னவாயிருக்கும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்? அது முரண்பாடுகள் நிறைந்ததாய்க் காணப்படும். ஆம், வேறுபட்ட சூழ்நிலை மற்றும் அநேக மாறுபாடுகள் கொண்ட மனிதர்கள் சேர்ந்து எழுதிய இப்புத்தகத்தில் காணப்படும் ஒருமைப்பாடு. இம்மனிதர்கள் இயற்கைக்கு மேம்பட்ட வழி நடத்துதலைப் பெற்றிருந்தார்கள் என்பதற்குப் பலமான ஆதாரமாய் இருக்கின்றது.*

# தீர்க்கதரிசனங்களும் அவைகளின் நிறைவேற்றமும்

*வேதாகமத்தை வாசிப்பவரை வசீகரிக்கும் உள்ளான இந்த ஆதாரங்கள் ஒருவேளை, அதை எழுதியவர்களின் குறிப்பிடத் தக்க முன்னறிவைச் சித்தரிப்பதாயிருக்கலாம். அவர்கள் எதிர்கால நிகழ்ச்சிகளை, வரலாற்றை எழுதுவது போல் எழுதினார்கள். இது ஆதாரங்களின் வரிசையில் ஒரு பலத்த இணைப்பாக உள்ளது. பழைய ஏற்பாட்டு வேத வசனங்களில் தீர்க்கதரிசனங்களின் மிகச் சிறந்த மூன்று வகைகள் இருக்கின்றன.*

### தேசங்களின் எழுச்சி மற்றும் வீழ்ச்சி, நகரங்களின் அழிவு ஆகியவைகளைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்

*யோசுவா 6:26ன் தீர்க்கதரிசனமானது, அது கூறப்பட்ட ஐந்நூறு வருடங்களுக்குப் பிறகு நிறைவேறியது. இதன் நிறைவேற்றத்தை நாம் 1 இராஜாக்கள் 16:34ல் படிக்கின்றோம். நாகூம் மற்றும் செப்பனியா ஆகியோர் நினிவேயின் அழிவைப் பற்றித் தீர்க்கதரிசனம் கூறினார்கள். ஏசாயா, பாபிலோனின் அழிவைப் பற்றியும், கோரேஸ் என்ற இராஜா*

*பிறக்கும் முன்னதாகவே அவனது பெயரைப் பற்றியும் கூறினார் (ஏசா. 45:1). உலக அரசுகள் எழுவது மற்றும் விழுவது பற்றி தானியேல் முன்னுரைத்தார் (தானியேல் 2). எருசலேமின் அழிவு அது நடக்கு முன்னரே இயேசுவால் விளக்கிக் கூறப்பட்டது (மத்தேயு 24).*

### யூத தேசத்தைப் பற்றிய தீர்க்கதரிசனம்

*யூதராஜ்யம் நிலைநாட்டப்படுவதற்கு முந்நூறு வருடங்கள் முன்பாகவே, இஸ்ரவேலின் ராஜாவைப் பற்றி உபாகமம் 28:36ல் முன்னு ரைக்கப்பட்டது. இதே வசனப் பகுதியில் பாபிலோனில் யூதர்கள் அடிமைத்தனத்திலிருப்பது பற்றி அது நடப்பதற்குச் சுமார் எண்ணூறு வருடங்களுக்கு முன்னதாகவே முன்னுரைக்கப்பட்டது. இஸ்ரவேல் நாடானது முற்றிலும் வெறுமையாக்கப்படுவது பற்றி எரேமியா தீர்க்கதரிசி, அவைகளைப் பாழாகவும் இகழ்ச்சிக்குறியாகிய ஈசல் போடுதலாகவும் நியமிக்கப்படப் போவதாக (எரே. 25:9) கூறினார். இஸ்ரவேலானது பிரமிப்பும் பரியாசச் சொல்லுமாகும் என்று மோசேயும் தீர்க்கதரிசனம் கூறினார் (உபா. 28:37). பழைய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் ஏவப்பட்டவர்களாய் எழுதினார்கள் என்பதற்கு இஸ்ரவேலின் வரலாற்றில் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள் பலமான குரல் கொடுத்துச் சாட்சியம் அளிக்கின்றன.*

### இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்

*சாதாரணமாக, ஒரு மனிதரின் வாழ்க்கை வரலாறு என்பது, அவரின் மரணத்திற்குப் பிறகுதான் எழுதப்படும், ஆனால் இங்கு ஒருவரின் வரலாற்றில் பெரும்பகுதியானது அவரது பிறப்புக்கு முன்பே எழுதப்பட்டுள்ளது. நசரேயனாகிய இயேசுவைப் பற்றி நூற்றுக்கும் அதிகமான விபரக் குறிப்புகள் பழைய ஏற்பாட்டில் காணக்கிடக்கின்றன. இந்தத் தீர்க்கதரிசனங்களும், வரலாற்றில் இவைகளின் நிறைவேற்றங்களும், பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் ஏவுதல் பெற்றவர்கள் என்பதையும், இவைகளை நிறைவேற்றிய இயேசுவின் தெய்வீகத்தையும் நிரூபிக்கின்றன. பின்வரும் ஒவ்வொன்றிற்கும் நாம் தீர்க்கதரிசனங்களைக் காண்கின்றோம்.*

1. *அவருடைய வம்ச வரலாறு (ஆதி. 3:15; 12:3; 49:10; ஏசா. 11:1; எரே. 23:5).*
2. *அவருடைய பிறப்பு (ஏசா. 7:14; மீகா 5:2).*
3. *அவருடைய வாழ்க்கை (ஏசா. 53:3-9; ஓசி. 11:1).*
4. *அவருடைய மரணம் (சங். 22:16-18; 34:20; ஏசா. 53:9).*
5. *அவருடைய அடக்கம் (ஏசா. 53:9).*
6. *அவருடைய உயிர்த்தெழுதல் (சங். 16:10).*
7. *அவருடைய பரத்துக்கேறுதல் (சங். 68:18).*

*இவ்வாறு, இயேசு பிறப்பதற்கு முன்னதாகவே எழுதப்பட்ட அவருடைய வாழ்க்கை வரலாற்றை நாம் பெற்றுள்ளோம்.*

*தீர்க்கதரிசனங்களால் முன்னிறுத்தப்பட்டவைகளை மறுக்கக் கூடிய பலத்த விவாதங்கள் எதையும் நான் ஒரு பொழுதும் கண்டதில்லை!*

## வேதாகமத்தின் மிகச் சரியான தன்மை

*சமீபத்திய வருடங்களில், வேதாகமம் மற்றும் அறிவியல் ஆகியவை பற்றி மிகவும் அதிகமாகப் பேசப்படுகின்றது. வேதாகமம் விஞ்ஞான உண்மைகளுடன் ஒத்துப் போவதில்லை என்று கேள்விப்படுவதால் சிலர் வேதாகமத்தைத் தூக்கியெறியவும் தயாராகின்றனர். இதற்கு மாறாக, வேதாகம போதனைகளுக்கும், உண்மை அறிவியலுக்கும் இடையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்பதே தெளிவான உண்மையாகக் கண்டறியப்பட்டுள்ளது.*

*வேதாகமமும் விஞ்ஞானமும் என்றதொரு விவாதத்தில் இரு கருத்துக்கள் நிலைநிற்கின்றன: முதலாவது வேதாகமத்தில் விஞ்ஞான ரீதியான தவறுகள் எதுவும் இல்லை. முதல் சிந்தனையில் இக்கருத்தானது, வேதாகமம் ஏவப்பட்டது என்பதற்கு பலமான சாட்சியம் போல் தோன்றாமல் இருக்கலாம். ஆயினும், வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் உலகத்தில் ஓங்கியிருந்த தவறுகளை நாம் நினைத்துப் பார்க்கையில், அவ்விதத் தவறுகள் எதுவும் வேதாகமத்தில் இடம் பெறாமல் ஒதுக்கப்பட்டிருந்ததென்பது ஒரு வகையான அற்புதம் என்று நாம் ஒப்புக் கொண்டேயாக வேண்டும். வேதாகமத்தில் இல்லாதவைகளுக்காகவும் நான் வேதாகமத்தை நம்புகின்றேன்! இதை எழுதியவர்கள் ஏவப்படாதவர்களாயிருந்திருந்தால், இந்த எழுத்தாளர்களின் காலத்தில் மிகவும் பரவலாயிருந்த பிரபலமான தவறுகளும் மதியீனமாக கருத்துக்களும் வேதாகமத்தில் இடம் பெறாமலிருந்தது எப்படி? வேதாகம எழுத்தாளர்கள் தங்கள் நாட்களில் நிலவிய ஞானத்தை எழுதினார்கள் என்று கூறப்படுவது இந்தக் கருத்தினால் மறுக்கப்படுகின்றது.*

*இரண்டாவது, வேதாகம எழுத்தாளர்கள் விஞ்ஞான உண்மைகளைக் கூட அவ்வுண்மைகள் மனித மூளைகளினால் கண்டறியப் படாததற்கு முன்னரே பதிவு செய்திருக்கின்றார்கள். பூமி உருண்டை, புவி ஈர்ப்பு விசையின் விதி மற்றும் வடதுருவத்தில் நட்சத்திரங்கள் இல்லாமை போன்றவை வேதாகமத்தில் எழுதப்பட்ட வேளையில் கண்டறியப்படாத உண்மைகளுக்கான சில உதாரணங்கள் ஆகும் (ஏசா. 40:22; யோபு 26:7). 2 பேதுரு 1:21ல் கூறப்பட்டுள்ள முடிவை ஏற்கும்படி மறுபடியும் நாம் பலவந்தப்படுத்தப் படுகின்றோம்: "தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்." தெய்வீக ஏவுதலின் உதவியில்லாமல் இம்மனிதர்கள் இவ்விஷயங்களை அறிந்திருக்க முடியாது! அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் இயக்கப்பட்டார்கள்! சிலர் விஞ்ஞான வெளிச்சத்தில் வேதாகமத்தைப் படிக்க பயப்பட்டிருக்கலாம், ஆனால் வேதாகமம் இவ்விதம் பயப்படுவதில்லை! இது இதற்கு முன்னிராத*

*கடுமையான சோதனைகளுக்குட்பட்டு விலையேறப் பெற்றதாக வெளி வந்ததாய் இருக்கின்றது.*

## *முடிவுரை*

*வேதாகமமானது உலகத்திலேயே அதிகமாய் நேசிக்கப்பட்ட புத்தகமாகவும் அதிகம் விற்பனையாகும் புத்தகமாகவும் இருக்கின்றது. சிலர் இதற்காகவே மரித்திருந்த போதிலும், இது மிகவும் வன்மையாக வெறுக்கப்பட்டும் இருந்திருக்கின்றது. இதன் விரோதிகள் இது நிர்மூலமாகி விடும் என்று முன்னுரைத்தார்கள், ஆனால் இது அழிக்க முடியாததாக இருக்கின்றது. நெருப்பு, பட்டயம் மற்றும் இதற்கு எதிராகச் செய்யப்பட்ட ஒவ்வொரு வல்லமையான தாக்குதலில் இருந்தும் இது தப்பிப் பிழைத்துள்ளது.*

*வேதாகமம் மிகப் பழமையானதாக இருந்தாலும் அது வழக்கற்றதாகி விடவில்லை. இதற்கு ஒருக்காலும் ஒரு துணைப் புத்தகம் ஒன்று தேவைப்பட்டதில்லை. இது ஒரு முழுவளர்ச்சி பெற்ற, எல்லாக் காலத்திலும் எல்லா மனிதர்களுக்குமான புத்தகமாயிருக்கின்றது. இயற்கைக்கு அப்பாற்பட்ட இதன் தொடக்கத்திற்கு இதுவும் இன்னொரு ஆதாரமாகும். இது எப்பொழுதும் ஏற்புடையதாக இருக்கின்றது. வானமும் பூமியும் ஒழிந்து போகும், தேவனுடைய வசனமோ என்றைக்கும் நிலைநிற்கும் (ஏசா. 40:8; 1 பேது. 1:25).*